**செ. கு. எண்**: 447 **நாள்**: 12.12.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 12.12.2012

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையைச் சேர்ந்த திரு. நாராயணன் என்பவரின் மகன் சதீஷ்குமார் 8.12.2012 அன்று காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், யு.கொத்தப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. துர்வாசன் என்பவரின் மகன் கிருஷ்ணப்பா 9.12.2012 அன்று தேன்கனிகோட்டை வட்டம், சின்ன நாகதுணை கிராமம் அருகே காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த சதீஷ்குமார் மற்றும் கிருஷ்ணப்பா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான சதீஷ்குமார் மற்றும் கிருஷ்ணப்பா ஆகியோரின் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**